செய்தி வெளியீடு **நாள் : 2.6.2025**

சிஎம்டிஏ சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்தும், முடியும் தருவாயில் உள்ள பணிகளை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம்

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் நடைபெற்றது

******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (2.6.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் சிஎம்டிஏ சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்தும், முடியும் தருவாயில் உள்ள பணிகளை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும் துறை அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.அ.பாலசுப்ரமணியன், திரு.ந.ரவிக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர்கள்/தலைமை நிர்வாக அலுவலர்கள் திருமதி.மு.இந்துமதி, டாக்டர் பிரின்சிலி ராஜ்குமார், கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.மா.பாலமுருகன், செயற்பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Verified RealEstate ™